தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 27-7-57 | சனிக்கிழமை | இதழ் 4

2

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்குப் பக்கத்தில் ஒரு சிறு கிராமம். பெரும்பாலும் குடிசைகளாகவே அமைந்த முந்நூறு வீடுகளைக் கொண்ட அந்தக் கிராமம்தான், அஞ்சலையின் கணவன் வடிவேலு பிறந்த கிராமம். இராமநாதபுரம் மாவட்டத்தில் தெருக்களில்கூட ஒழுங்கிருக்கும் என்பதற்கு, அந்தக் கிராமம் ஒரு எடுத்துக்காட்டு. ஆடுகளும், மாடுகளும் கிராமத்திற்குள்ளே எவ்வளவுதான் வலம் வந்தாலும், சுகாதாரக் குறைவு ஏற்படாதபடி தெருக்கள் அடிக்கடி சுத்தம் செய்யப்படும். வாழ்க்கையில் நைந்து வறுமையால் வாட்டி எடுக்கப்பட்ட அந்தக் கிராமத்து மக்களுக்கு சுத்தத்திலும், சுகாதாரத்திலும் அவ்வளவு ஆர்வமிருந்தது.

வடிவேலுவின் தகப்பனார், நாலு காணி நில புலன்களுக்குச் சொந்தக்காரராகத்தான் இருந்தார். அதனால் கட்டுகிற துணிக்குப் பஞ்சம் வந்தாலும், சோற்றுப் பஞ்சம் வராமல் அந்தக் குடும்பம் பிழைத்திருந்தது. நடந்து சம்பாதித்தவன் இருந்து சாப்பிட்டால், வளர்ந்தது தேயும் கதை போல, வடிவேலுவின் தகப்பனார் சம்பாதித்த சொத்து அவர் தலைமுறையிலேயே கரைய ஆரம்பித்தது. அவர் இறந்தபோது வடிவேலுவுக்கு மிஞ்சியது ஒரு காணி நிலமும், ஒரு ஓட்டைக் குடிசையும், தகப்பனார் கண் முன்னாலேயே மணமுடிக்கப்பட்ட அஞ்சலையும்தான். நாளாக நாளாக, இருந்த ஒருகாணி நிலத்திற்கும் ஆபத்து ஏற்பட்டு, ஒத்திவைக்கப்பட்டு வட்டியில் முழுகிவிட்டது. பிழைப்புக்கு வேறு வழியில்லாத வடிவேலு என்ன செய்வதென்று புரியாமல் மதுரைக்குப் போனான். மதுரை நகரத்தில் கிராமவாசி செய்யக்கூடிய வேலை என்ன இருக்கிறது! சுற்றிச் சுற்றி அலைந்தான். கடைசியில் கருப்பசாமி நாடார் மளிகைக்கடையில் வேலை செய்துகொண்டிருந்த, தன் நண்பன் முத்துசாமியைச் சந்தித்தான். முத்துசாமியின் யோசனைப்படிதான், அரசாங்கத்தார் அப்போது தீவிரமாக உருவாக்கிக் கொண்டிருந்த ஆயுதம் தாங்கிய போலீஸ் படையில் அவனும் சேர்ந்தான். இரண்டொரு வாரப் பயிற்சிக்குப் பிறகு, ஐதராபாத்துக்கு அனுப்பப்பட்டான். அங்கே ரஜாக்கர்களை அடக்குவதில் பெரும் பங்கு கொண்டான். அடக்கிய பிறகும் ஒரு வருட காலம் ஐதராபாத்திலேயே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இளம் மனைவியையும், பழகிய கிராமத்தையும் பிரிந்து ஐதராபாத்தில் இருப்பது அவனுக்கு வேதனையாக இருந்தாலும், வேறு வழியின்றி இருதயத்தைக் கயிறு போட்டுக் கட்டிக் கொண்டு முடங்கிக் கிடந்தான். மாதம் இருபது இருபத்தைந்து ரூபாய்கள் அஞ்சலைக்கு அனுப்பி வந்தான். தனியாக இருந்த அஞ்சலை, வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி அந்த வருமானத்திற்குள்ளாகவே குடும்பம் நடத்திக் கொண்டிருந்தாள். வறுமை அவர்களை அவ்வளவு தூரம் பிரித்து வைத்தது. வடிவேலுவுக்கே சில நேரங்களில் வேலையை விட்டுவிட்டுக் கிராமத்திற்குத் திரும்பிவிடலாம் என்ற எண்ணம் தோன்றும். ஆனால் கிராமத்தில் போய் என்ன செய்வது என்ற பயம் அந்த எண்ணத்தை அடக்கிவிடும். பயங்கரமான உணவையும், கடுமையான கட்டுப்பாடுகளையும் சகித்துக் கொண்டு ஓராண்டுக் காலத்தை ஐதராபாத்தில் கடத்திய வடிவேலு பதினைந்து நாள் லீவில் வீட்டிற்கு வந்தான். அந்தப் பதினைந்து நாட்கள், அவன் வாழ்வில் எல்லை இல்லாத இன்பத்தைத் தந்த நாட்களாகும். எவ்வளவு காலப் பிரிவுக்குப் பிறகு இந்தப் பதினைந்து நாட்கள் கிடைத்திருக்கின்றன! வரும்போது அஞ்சலைக்கு ஒரு சேலைகூட வாங்கி வந்தான். அந்த ஒரே சேலையை அடிக்கடி கட்டச் சொல்லி அழகு பார்த்தான். பதினைந்து நாட்களும் அவனை விட்டுப் பிரியாமலேயே இருந்தாள் அஞ்சலை. தடைபட்டுக் கிடந்த இரண்டு ஆறுகள், அணை உடைத்துக் கொண்டு கலந்ததுபோல், அவர்கள் இருவரும் மகிழ்ந்திருந்தார்கள். விடுமுறையின் கடைசி நாள் அவர்கள் இருவருக்குமே வேதனையாக இருந்தது. மூட்டை முடிச்சுகளோடு வடிவேலு புறப்படும்போது அஞ்சலை அழுதே விட்டாள். ஒரு வழியாக விடை பெற்றுக்கொண்டு வடிவேலு புறப்பட்டான். கிராமத்திற்கு வெளியே இருக்கும் பெரிய ரோடுவரை, கூடவே வந்து வழியனுப்பினாள் அஞ்சலை. பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தபோது அவன் பார்த்த பார்வை, எப்போதுமே அஞ்சலையின் மனதில் நின்று கொண்டே வந்தது. இன்னும் எத்தனை ஆண்டுகள் கழித்துச் சந்திக்கப்போகிறோமோ என்பது தான் அந்தப் பார்வையின் பொருளாக இருந்தது. ஆம்;

கண்ணதாசன்

— 5-ம் பக்கம் —

வாழும் மொழியில் வாழா மொழி!

மிகக் கொடிய ஆதிக்க அயல் ஆட்சிகளுக்கு உட்பட்டு நலிந்து வாடும் அடிமை நாடுகளுக்கு உரிய எல்லா இலக்கணங்களும் இன்றைய தமிழகத்துக்கு அமைந்துள்ளன, அமைந்து வருகின்றன. வெள்ளையர் ஆட்சியில் தமிழருக்கு இருந்த உரிமைகள்கூட, மதிப்புக்கூடப் படிப்படியாகக் குறைந்துவருகின்றன, ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. அவ்வெள்ளையர் ஆட்சியில் இல்லாத வரிச்சுமைகள், மொழிச்சுமைகள், அடக்குமுறைகள், பொல்லாங்குகள் இன்று சுமத்தப்பட்டு வருகின்றன, இழைக்கப்பட்டு வருகின்றன.

தமிழர் நாட்டுக்குத் தமிழ்நாடு என்ற பெயர் இல்லை. உரிமைக் கேரளத்துக்கும், உரிமை ஆந்திரத்துக்கும் இடையே அது மட்டும் உரிமையற்ற அடிமைச் 'சென்னை' யாகவே இயங்கி வருகிறது. வடதிசையிலுள்ள பிறமொழி அகதிகளுக்குத் தம் மொழி நிலங்களிலும் உரிமைச்சலுகை, பாதுகாப்பு, தனிச்சிறப்பு வாய்ந்த உதவிகள் உண்டு. பிறமொழி நிலங்களில்-தமிழகத்தில்கூட தில்லி ஆட்சி இவற்றை அவர்களுக்கு வலிந்து பெற்றுத்தர முன்வருகிறது. ஆனால் வெளிநாடுகளில் அவதிப்பட்டு நாடிழந்து, வீடிழந்து, உரிமையிழந்து தவிக்கும் தமிழ் அகதிகளுக்கு எந்த நிலத்திலும், தமிழ் நிலத்தில் கூட அத்தகைய உதவிகளோ, சலுகையோ, உரிமையோ, பாதுகாப்போ கிடையாது. அவர்கள் குடிப்பிறந்த நாட்டுரிமையும் இன்றி அல்லற்படுகின்றனர். குடிபுகுந்த நாட்டுரிமையும் இன்றி, குடிபுகுந்த நாட்டுரிமையைப் பாதுகாக்க, அதற்குப் போராடத்தக்க சொந்த அரசு எதுவும் இல்லாமல் பரிதவிக்கும் நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

தமிழக ஆட்சியில் மட்டுமல்ல, தமிழக நாணயத்தில்கூடத் தமிழ் இல்லை. தொலை அயலார் ஆட்சியான வெள்ளையர் ஆட்சியில் நாணயங்களில் இருந்த அளவு தமிழும் இன்று ஒழிக்கப்பட்டுவிட்டது. அஞ்சல் அட்டையில், அஞ்சல் உறையில், பண அஞ்சல் படிவத்தில், அஞ்சல் தலையில் தமிழ் கிடையாது. அதே சமயம் வெள்ளையர் ஆட்சியிலே இல்லாத இந்தி இன்று நாணயத்தில், புகைவண்டி நிலையங்களில், அஞ்சல் தந்தி நிலையங்களில், அலுவலகங்களில் இதே ஆட்சியால் புகுத்தப்பட முடிகிறது. இந்தி மொழியில் அதற்கிருக்கும் இந்த அடங்கா ஆர்வத்தில் ஒரு சிறு கூறுகூட தில்லி ஆதிக்க ஆட்சிக்குத் தமிழில் இருக்க, ஏற்பட வழியில்லை. அதை வலியுறுத்த, பரிந்துரைக்க, அதற்கு மன்றாடக் கூடிய சொந்த அரசும் ஆட்சி உரிமையும் தமிழருக்குக் கிடையாது.

அஞ்சல் தலைகளிலே வடமொழிக் கவிஞர்களுக்கு, முனிவர்களுக்கு, இந்திக் கவிஞர்களுக்கு, பக்த சிகாமணிகளுக்கு, அறிஞர்களுக்கு, பிற வடதிசை மொழிப் புலவர்களுக்கு, முன்பு வெள்ளையராட்சியில் இல்லாத இடம் புதுவதாகத் தேடி அளிக்கப்பட்டுள்ளது. அளிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் தமிழகம் இத்துறையில் முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்படுகிறது, மறக்கடிக்கப்படுகிறது. தமிழுடன் ஒட்டியவை என்ற ஒரே குற்றத்துக்காக, மற்றத் தென்னக மொழிகள் கூடத் தமிழைப் போலப் பாரதப் பண்பாட்டுக்கு அயலான மொழிகளாக ஒதுக்கப்பட்டுள்ளன. சாதி மத கட்சி வேறுபாடின்றித் தமிழகத்தின் எல்லா வகுப்பினரும், புலவர்களும் பாமரர்களும் பொது அரசியல், கலை பண்பாட்டு நிலையங்களும் இவ்வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியுள்ளன, வற்புறுத்தி மன்றாடியுள்ளன. தமிழ்க் கவிஞர்கள், தென்னகச் சீர்திருத்தச் செம்மல்கள், சிறப்பாகத் திருவள்ளுவர், இளங்கோ, கம்பன், பாரதி, எழுத்தச்சன், திக்கணன் போன்ற புலவர்கள், அப்பர், நம்மாழ்வார், வள்ளலார் போன்ற பக்தர்கள், வீரேசலிங்கம், பந்துலு, வ. உ. சி. போன்ற நாட்டுமொழிப் பக்தர்கள், திருப்பூர்க் குமரன் போன்ற தியாகிகள் ஆகியோர் உருவங்கள் இடம்பெற வேண்டுமென்று தமிழர்கள் வாதாடியுள்ளனர். ஆனால் வடதிசை அயலரசின் இறுமாப்புச் செவிகள் இவற்றைப் பொருட்படுத்தவில்லை.

தமிழக அரசு ஒன்று அமைந்திருந்தால் இவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்ப்புலவரேறுகளான மறைந்த ஆசிரியர் மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோருக்கும் தமிழுக்குப் போராடி மாண்ட தமிழ்த் தியாகிகளான தாலமுத்து, நடராசனுக்கும் இத்தகு சிறப்பிடங்கள் அளிக்கப்பட்டிருத்தல் உறுதி.

தமிழுக்கும் தமிழ் சார்ந்த தென்னக மொழிகளுக்குந்தான் ஏக பாரதத்தில் இடம் இல்லை - நாட்டு மொழிகளுக்குரிய இடமும் அவற்றுக்குக் கிடையாது - அயல் மொழிகளுக்கு உள்ள சலுகைகளும் - அவற்றுக்கு இருக்கமுடியாது - அடிமை மொழிகளுக்கு மட்டுமே உரிய உரிமையற்ற நிலை - புறக்கணிப்பு-இருட்டடிப்பு ஆகியவைதான் அவற்றுக்கு இருக்கமுடியும். இது இன்றைய நிலை.

பிறந்தநாள் முதல் கதராடையே உடுத்த காந்தி பக்தர்கள்கூட-சட்டசபை உறுப்பினர், மந்திரிகள் - முதன் மந்திரிகள்கூட தமிழராய், தமிழில் ஒரு சிறிது பற்றுதல் உடையவராய், தமிழர், தமிழகம் பற்றி ஒருசிறிது அக்கறை உடையவராய் இருந்துவிட்டால், இருக்க, இயங்கத் தொடங்கிவிட்டால் அவர்கள் ஒருநாள்கூட ஆட்சிப்பீடத்தில் நீடிக்கமுடியாது. தாம் தமிழர் என்பதையே மறந்து தமிழருக்கு அயலாராகவும், தில்லி அயல்மொழி அயலாட்சியாளர் சொல்லுக்கடங்கித் தலையாட்டும் பொம்மையாகவும் நடப்பவர் மட்டுமே அப்பீடத்தில் உறுதியாக அமரமுடியும். மேலும் மக்கள் விருப்பம் ஒன்றே ஆட்சியுரிமைப் பீடங்களுக்கு இன்று உயர்த்திவிட முடியாது- மக்கள் வெறுப்பு அவற்றிலிருந்து அவர்களை விலக்கிவிடவும் முடியாது. பதவி காட்டியும் கூலி கொடுத்தும் வாங்கிய அடிமைகள், அச்சுறுத்தி ஆட்கொள்ளப்பட்ட அதிகாரிகள் அயற்பண்பாடுகளையே ஆதரிக்கும் ஓரினப் பத்திரிகைகள், விலை கொடுத்தும் பின்னணி வேலைப் பாடுகளாலும், தகிடுதத்தங்களாலும் பெறப்பட்ட போலி வாக்குரிமைச் சீட்டுக்கள் ஆகியவற்றின் மூலம், அவர்கள் மக்கள் பெயர் கூறிக்கொண்டே மக்களுக்கெதிரான ஆட்சியை நீடித்துவிட முடியும் என்ற நிலை இன்று உள்ளது. உண்மையில் அங்கேரியில் ரஷ்யர் அமைத்துள்ள பொம்மை அரசாங்கத்துக்கும் தமிழகத்தில் சென்னை அரசாங்கத்துக்கும் வேறுபாடு கிடையாது - அங்கேரியின் நிலை ஒன்றே உலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது, தமிழக நிலை தெரியவில்லை என்ற ஒன்றே அவற்றினிடையே உள்ள வேறுபாடு!

வெள்ளையர் ஆட்சியில் தொழில் துறையில் இந்தியா உலகில் பத்தாம் படிக்கும் கீழ்ப்பட்ட நிலையில் இருந்தது. காங்கிரஸின் உழைப்பினாலும், சுயராஜ்யத்தினாலும், இவ்விரண்டின் சலுகைகள், உரிமைகள் பெற்ற வடநாட்டு முதலாளிகள் கூட்டு முயற்சியாலும் இன்று இந்தியா பிரிட்டனையே பணிய வைக்கும் நிலையில் உலகின் முதல் வரிசை நாடுகளில் ஒன்றாகி வருகிறது. ஆனால், தமிழகம், தமிழகத்தை அடுத்து வாழும் திவினை உடைய பிற தென்னகப் பகுதிகள் வெள்ளையர் ஆட்சிக்கால நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளன. கூடுமான போதெல்லாம் அந்நிலையிலிருந்து கூடப் பின்னணிக்குத் தள்ளப்பட்டுள்ளன - தள்ளப்பட்டு வருகின்றன. ஆக்கிப் படைக்கும் ஆற்றலும் ஆர்வமுமுடைய நாட்டுப் பிரதிநிதிகள் யாவரும் - நல்ல தலைவர், நல்லறிஞர், நற்கலைஞர், நல்லவிரர், நல்ல குடிமக்கள் அனைவரும் கீழ் நிலைக்கு ஒதுக்கப்படுகின்றனர். நாட்டைக் காட்டிக் கொடுத்து நாட்டுமக்களைச் சுரண்டும் சக்திகளும், அவர்களை அண்டிப் பிழைக்கும் 'கங்காணி'களுமே இவ்வெல்லாத் துறைகளையும் நிரப்பி, நாட்டு வாழ்வைப் படிப்படியாக அழித்து நாளடைவில் தம் அழிவுக்கும் அடிகோலுகின்றனர். இந்நிலை தமிழகத்தில் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே பெருகிற்று-ஆனால், அதற்கு முன்னே தொடங்கிவிட்டது. உண்மையில் வெள்ளையர் ஆட்சிக்கும் அதை அடுத்து வந்துள்ள இந்தி ஆட்சிக்கும் முன்னரே அடிகோலிய ஐந்தாம் படைச் சக்தி அதுவே - வடமொழிப் பற்று என்ற போலிப் போர்வையின்கீழ் அக்குழு அயலாட்சிகளிலும் அவ் அயலாட்சிகளுக்கு உகந்த போலிப்பண்புகளை வளர்த்து வந்துள்ளது.

அயலாட்சியாயினும் வெள்ளையராட்சி பொருளாதாரச் சுரண்டல் என்ற ஒரு துறை தவிர, மற்றத் துறைகளில் மக்கள் நலமும், மக்கள் உரிமைகளும் மதித்துக் குடியாட்சிப் பண்பு பேணிற்று. குடியாட்சி நிறுவனங்களையும் தேச தேசிய வரலாறுகளையும் உருவாக்கப் பாடுபட்டது. ஆனால், அந்தக் குடியாட்சிப் பண்பிடையேயும் மக்கள் மொழிக்கு எதிரான தம் போலி உரிமைகளை வடமொழிப் பற்றின் போர்வையில் அப்பற்றாளர் நுழைக்கப் பலதடவை முயலாமலில்லை. இவற்றுள் 'திரு' என்ற தமிழ் மரபை ஒழித்துத் தமிழில் இன்னும் எழுத்தற்ற 'ஸ்ரீ'யைப் புகுத்திப் பரப்ப அவர்கள் செய்த முயற்சி குறிப்பிடத் தக்கது. ஏனெனில் மக்கள் வழக்கில் இன்றும் 'திரு'வே பெரிதும் இடம் பெறினும், ஓரினப் பத்திரிகை உலகிலும் அவ்வினத்தார் பிடியிலேயே இன்னும் உள்ள வடவர் ஆட்சித் துறைகளிலும் 'ஸ்ரீ' வெற்றிபெற்று இன்னும் இறுமாப்புடனேயே உலவி வருகின்றது. தவிர வடதிசை ஆதிக்கத்துக்குள்ளேயே ஒரு வடதிசை ஆதிக்கம் செறிந்த தனித்துறையாக வானொலி நிலையமும் அதன் கிளைகளும் இயங்கி வருகின்றன. தமிழ் மரபுக்கும் பண்புக்கும் மாறான—மொழிநூலார் கூற்றுப்படி அகில இந்திய மொழிப் பண்புக்கே மாறுபட்ட—வடமொழி உச்சரிப்புக்களை வடமொழிச் சொற்களில் மட்டுமின்றித் தமிழ்ச் சொற்களிலும் புகுத்தித் தமிழர் காதுகளுக்குத் தமிழையே நாராசமாக்கிவிடுகின்றனர். போலி வடமொழிப் பற்றாளர்கள் மாதா என்பதை 'மாத்தா' என்பது போலவும், நிச்சயம் என்பதை 'நிஃச்சயம்' என்பது போலவும் உச்சரிப்பதன்றிக் கட்சி, ஆட்சி என்ற சொற்களை 'கக்ஃட்சி, ஆக்ஃட்சி' என்பது போல ஒலித்து அயல்மொழியாளர் போலப் பேசுகின்றனர்.

இப்போக்கின் தவற்றைப் பத்திரிகையுலகில் ஒரு பத்திரிகையின் பெயரே தெளிவாக்கிக் காட்டுகிறது. தமிழில் லகரத்துக்குப்பின் ககரம் ஒலிக்கும் வகையை நல்கி, பல்கி, கால்கோள், என்ற தமிழ்ச் சொற்களிலே காணலாம். ஆனால் 'கல்கி' என்ற சொல் அயல்மொழிச் சொல்லாதலால் 'கல்க்கி' என்பது போல இன்று ஒலிக்கப்படுவது காண்கிறோம். இதைப் படிக்கும் தமிழரின் தமிழ்ப் பண்புக்கு முரணான நாப்பழக்கம், முன்காட்டப்பட்ட நல்ல தமிழ், அதாவது தனித்தமிழ்ச் சொற்களின் ஒலியையும் மாணவரிடை கெடுக்கத் தொடங்கிவிட்டது. சென்னையிலும், சென்னையை அடுத்த மாவட்டங்களிலும் ஏற்கனவே 'வந்துகொண்டு', 'சுமந்துகொண்டு' என்ற தொடர்கள் 'வந்துக்கொண்டு' 'சுமந்துக்கொண்டு' என்று ஒலிக்கப்படுகின்றன. எழுத்து வடிவைத் தவறாக ஒலிப்பதுடன் அவர்கள் நிற்கவில்லை. தவறான உச்சரிப்பை மீண்டும் எழுத்துவடிவில் புகுத்திப் பேச்சுத் தவற்றை எழுத்துத் தவறாக்கி, மொழி மரபைக் கெடுக்கின்றனர். இதனால் மாணவர்கள் மட்டுமன்றி, பத்திரிகை எழுத்தாளர்கள், புது எழுத்தாளர்கள், புதுக்கவிஞர்கள் வரை அவற்றைத் தவறாக ஒலித்துத் தவறாகவே எழுதத் தொடங்கிவிட்டனர். இது தமிழர் மரபுக்கும் தமிழ் மரபுக்கும் செய்யும் கேடு சிறிதன்று.

இந்தச் சூழ்நிலைகளுடனும், பின்னணியுடனும் தான், நாம் இப்போது நம் முன் தோன்றியுள்ள ஒரு புதிய ஆபத்தைப்பற்றி ஆராய வேண்டியவர்களாகியுள்ளோம். இந்திக்கும், அயல்மொழிகளுக்குமே எப்படியாவது சலுகையும், உரிமையும் வளர்த்துவிடப் பாடுபடும் தில்லி ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளான சென்னைக் கிளை அரசியலார், 'தமிழ்மொழி ஆட்சிக் குழு' என்ற ஒரு அரசியல் நாடகக் குழு அமைத்துள்ளார்கள். அதன் வாயிலாகத் தமிழை அரசியல் மொழியாக்கப் பாடுபடும் சாக்குடன் தமிழின் அடிவயிற்றிலேயே — உயிர்க்கருவிலேயே கையை வைத்துவிட

— 7-ம் பக்கம் —

-பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, M.A., L.T.-

வெள்ளம்!

★ "வையையார் கோமான்" ★

மதி தவழும் மார்கழி மாதக் கடுங் குளிர் இரவு! மரமெல்லாம் நடுங்குமென்பார்கள். அந்த மனிதன் மட்டும் ஏனோ, எதற்கும் நடுங்காமல் தன் பாதையிலேயே சென்றுகொண்டிருந்தான்! ஆனால் அவன் உள்ளம் மட்டும் ஆட்டமே கண்டுவிட்டிருந்தது!

அமைதி கொலுவிற்றிருந்த அந்த இரவுவேளையில், ஒரு கையிலே உறுதிவாய்ந்த நீண்ட தடியும், மறு கையிலே பாதியளவு அன்னம் நிரம்பிய திருவோடும் தாங்கியவாறு வந்துகொண்டிருந்தான் அவன்!

நல்ல உடற்கட்டு. வயது - முப்பது, முப்பத்தைந்து இருக்கும். அவன் மேனியின் பொலிவை நன்கு மறைத்து, உலகுக்கு எளிமையை எடுத்துக்காட்ட முக்காடிட்ட வண்ணம் காவியுடை தரித்திருந்தான்!

அந்தக் குளிர் இரவில், தனிமையில் வந்துகொண்டிருந்த அவன் இதய ஓடையில் எண்ணக் குமிழ்கள் எழுந்து, எழுந்து வெடித்து மறைந்துகொண்டிருந்தன!

வாலிப வயதிலேயே காவியுடை தரித்திக்கொண்டவன் அவன்! ஓரளவு பற்றேதுமில்லாமல் இதுவரை வாழ்ந்தும் விட்டான்! ஆனால் இப்போது மட்டும் ஏன் வாழ்வின் சுவைகளை நாமும் அனுபவித்தால்தான் என்ன என்கிற 'கோழை மனம்' உண்டாயிற்று அவனுக்கு?

ஆம்! 'கோழை மனம்' என்றுதான் கூறிவிட வேண்டியிருக்கிறது. இலட்சியம் இதயத்திலே உருவாகு முன்னே கோழையென்றும் வீரம் என்றும், மானம்-அவமானம் என்றெல்லாம்கூட அதிக அளவு எண்ணிப்பார்த்திட முடிவதில்லை!

தன் உள்ளம் இப்போது மாறிவிட்டது என்று அவனால் நம்பவும் முடியவில்லை! மாறாமல் உறுதியாகவே நிற்கிறது என்று 'பொய்' கூறவும் அவன் தயங்கினான்!

காவியுடை அணிந்தவாறும், மொட்டைத்தலையை முக்காடிட்ட வண்ணம் மறைத்துக்கொண்டும், நெற்றியிலே திருநீற்றுப்பட்டை விளங்க ஒரு கையிலே நீண்ட தடியும், மறுகையிலே கருநிறத் திருவோடும் ஏந்தியவாறு அவன் தெருவிலே செல்லுவதைக் காணும் பலரும், சமூகத்திலே அவனை ஒரு பொருட்டென மதித்ததாகக் காட்டிக்கொண்டதை இதுவரை அவன் கண்டதேயில்லை!

'தாயே!' என அவன் அழைக்கும்போது, அன்னமிட இயலாதவர்கள் "போ...போ" எனக் கூறிவிடுகிறார்கள்! அன்னமிட வெளியிலே வருபவர்களோ, அவன் திருவோட்டிலே மட்டும் பார்வையைப் பதித்தவாறே வந்து அன்னமிடுகிறார்கள். இதுவரை அவனும் பார்த்திருக்கிறான் எந்தப் பெண்ணின் பார்வையும் சாதாரணமான முறையிலேகூட அவன் பார்வையோடு சந்தித்து வினாடியளவுகூட நிலைபெற்றதில்லை!

விசித்திரமான இந்த மனித சாதி குறிப்பாக வாலிபத்தின் அணைப்பிலே சிக்கிய மாதர்குலம், தனக்கு அறிமுகமில்லாத வேறொரு ஆடவரைக் காணுகின்ற நிலையில் பார்வை தடுமாறுகிற காரணம் அப்போதுதான் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது! வாலிப வயது - இளநலம் உண்ணுகின்ற காலம்! உடலின்பம் அனுபவிக்கிற வேட்கை மிகுந்த அந்தப் பருவ காலத்திலே, ஒரு மங்கையின் கண்ணிலே உள்ள கருவட்டத்திலே தொண்ணூற்று ஒன்பது சதம் காதலும், மீதமிருக்கிற ஒரு சதத்திலே பாதியளவு கருணையும், பாதியளவு 'திருப்தியின்மை'யும் தெளிவாகப் புலப்படுகின்றன! இதிலே எவ்வளவு தூய்மை நிறை அந்நிய ஆடவர் வந்தாலும் உண்மை நிலையைச் சிறிதும் உணரமுடியாமலும் குழம்புகின்ற உள்ளமில்லாது, காதலோட்டமில்லாச் சாதாரணப் பார்வை பார்க்க அவர்களால் முடிவதேயில்லை! முயன்றாலும் தோற்றுவிடுகிறார்கள்!

அந்த பலவீன மனத்தின் தோல்வியை மறைக்க, அவர்களுக்கு 'நாணம்' என்கிற பழைய போர்வையே உபயோகப்படுகிறது!

அவர்களின் உடலசைவுக்கே உள்ளத்தை ஆட்டம் போட விட்டுவிடும் ஆடவர் கூட்டத்திற்கு 'நாணம்' என்ற அந்தப் போலிச் சொல்தான் எத்தகைய இன்பத்தை அளித்துவிடுகிறது! இவ்வாறெல் கூட அவன் எண்ணியிருக்கிறான் பலமுறை!

காவியுடையினுள்ளே மறைந்து விளங்கும் கட்டுடல் கொண்ட மினுமினுப்பான அவன் மேனியையும் உறங்காத உள்ளத்தையும் கண்டுகொள்ள எளிதிலே எந்தப் பெண்ணாலும் இயலாததுதான் இருந்து வந்தன இவ்வளவு நாட்களும்!

'எந்தப் பெண்ணுக்கும் இல்லாத ஒரு துணிவு - திறமை, நூற்றிலே ஒருத்தியான அவளுக்கு மட்டும் எப்படித்தான் வந்தது! என்னையே, உணர்ச்சி மலர்கள் பூத்த குளத்தில் தள்ளிவிட்டு, தத்தளிக்குமாறு விட்டுவிட்டாளே! யாருமே பொருட்படுத்தாத காவியுடைப் பரதேசி நான். என்னுடைய இளமையும், உடற்கட்டும் மாய்ந்துபோன ஒன்றாகக் காவியுடை வெளிப்படுத்துகிறது! ஆனால்... அவள்?"-ஆம்! வியப்பு மேலீட்டால் அவன் நடந்துவந்த களைப்பையும் மறந்தான்!

வழக்கம்போல் இரவு படுத்துறங்கும் அந்தப் பாழடைந்த சத்திரத்துத் திண்ணையிலே வந்து அமர்ந்தான்!

சத்திரத்தின் எதிர்புறமாக அமைந்திருந்த அந்தச் சிறு மாடி வீட்டு மேலறையின் மின்சார விளக்கு, அப்போதுதான் ஒளிவீச ஆரம்பித்தது! அந்த அறையின் சன்னல் கம்பியைப் பிடித்தவாறு வழக்கம்போல் உணர்ச்சியின் உருவமாக 'அவள்' நின்றுகொண்டிருந்தாள்!

தெருவிளக்கு அவளுக்குத் துணை புரிந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்!

சிறிதுநேரத்தில் அவள் மாடி அறையினின்றும் கீழே இறங்கி வந்தாள்! அரைத்தூக்கத்திலே ஊசலாடிக்கொண்டிருந்தான் அந்த வீட்டின் வயதான வேலைக்காரன்!

அவன் கையிலே ஒரு ரூபாய் நாணயம் தவழ்ந்தது! சிறிதுநேரத்தில் கதவைத் திறந்துகொண்டு எங்கோ பயணமானான் அவனும்!

ஊர்க்கோடியிலே இருக்கிற குடும்ப நண்பர் ஒருவரின் வீட்டுத் திருமணம் காணத் தந்தையும், தாயும் அந்த இரவிலேயே சென்றுவிட்ட வேளையில், வேலைக்காரனும் துணைக்கு இல்லாது, அவ்வளவு பெரிய வீட்டில் தனிமையான சூழ்நிலையில், தான் மட்டுமே இருக்கிறோம் என்றெல்லாம் எண்ணும்போது, ஒரு இளம் மங்கையின் நெஞ்சைப் பயம் கவ்வுவதற்குப் பதிலாக உற்சாகம் அவளைப்பிடித்து உலுக்கியது என்றால்...?

ஒரு சிறு தாளில் பேனாவினால் ஏதோ சில வரிகளை எழுதினாள்! அதை நன்றாக மடித்துக்கொண்டு மீண்டும் படியேறி மாடியறையை வந்தடைந்தாள்!

இவளுக்காக ஏங்கியவாறே மாடியறை சன்னலையே பார்த்த வண்ணம் இருக்கும் அந்தக் காவியுடைக் கட்டழகன் ஆர்வமுடன், வந்து நிற்கும் இவளை நோக்கினான்! இவளும் நோக்கினாள்! சுற்றும் முற்றும் பார்த்தபின் இன்று அவனே துவக்கினான் பாடத்தை! பதிலுக்கு இவளும் சிரித்தாள்! தன் கையிலே இருந்த சிறு காகிதத்தைக் கீழே நழுவவிட்டாள்! அவன் அதை ஆர்வமாக எடுத்து எழுத்துக் கூட்டியாவது படித்து முடித்தான். தலை நிமிர்ந்து இவளை நோக்கினான்!

நிலவு பொழியும் நள்ளிரவின் ஏகாந்தமான அமைதியில், தங்கு தடையின்றிருக்கும் மென்காற்று விசிக்கொண்டிருக்கும் அந்த மாடி அறையில், தனிமையில் இரண்டு உருவங்கள்! ஆம்! அவளும்-அவனும்!

காவியுடை தரித்தவன்-கட்டுடல் கொண்டவன், கல்வியறிவு அதிகம் இல்லாதவன், காதல் துவக்குவதிலே கற்றவன் அவள் மனம் திருப்தியுறும் முறையறிந்திருக்கவில்லை போலும்! அவளாகவே முதலில் அவனைத் தழுவ முயன்றாள். ஆனால் என்னவோ, எதையெதை எண்ணிக்கொண்டானோ அவள் பக்கம் முகத்தையும் காட்டாது, வேறு புறமாகத் திரும்பி நின்றுகொண்டான் அவன்.

'சோலையில் தனிமையில் இருக்கிறாள். விழியாலே வலை வீசிப் புன்னகை செய்து தன்னை 'வா' வென்று அழைத்து நிற்கிறாள்' என்றெல்லாம் எண்ணி, அருகே நெருங்கி ஆர்வமாகத் தழுவிய போது, உடலை உறுத்தும் ஒரு சிலையாக அது இருந்துவிட்டால் மனம் என்ன பாடுபடுமோ, அப்படிப்பட்ட நிலையையே அடைந்தான் அவன்!

ஆம்! அவள் ஒரு விதவை! வாலிபத்தின் சுவையறிந்தவள்!

இதுவரை அவளை, அவன் அருகிலிருந்து பார்த்ததில்லை. உயர்ந்த மாடியறை சன்னல் வழியாக அவள் காட்சியளிப்பாள்! இவனும் பார்த்து வந்திருக்கிறான்! ஆனால் இப்போது பாபம், புண்ணியத்திலே நம்பிக்கை கொண்டிருந்த இவனுக்கு எதிரில் நிற்பவளோ, ஒரு வெள்ளைச்சேலைக்காரி! விதவைப் பெண்!

தனக்கு உரிமையில்லாத ஒரு பெண்ணை அனுபவிப்பது 'பாபம்' எனும் சாதாரண மனித நீதியை அவன் என்றும் அறிவான். எனினும், மயங்கிவிட்ட அவன் மனதைத் தான் ஒரு 'விதவைப் பெண்ணை' அனுபவித்துப் பெறப்போகும் அதிக பட்ச'பாபம்' தெளிவிக்கச் செய்ததோ என்னவோ!

சிந்தனையினின்றும் அவன் விடுபட்டு அவள் பக்கம் திரும்பினான். அவனது கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன! அங்கே அவள் வண்ணப்பட்டுச் சேலையணிந்து, வளமான நெற்றியிலே குங்குமத் திலகம் வைத்து,வாரிச் சுற்றிய கூந்தலிலே நறுமண மலர் சூடி, எழில் கோலமுடன் புன்னகை தவழ அவனருகே நெருங்கினாள். உடலோடு உடல் உராய்ந்தது!

அவன் அவள் சிறிய இடையைத் தன் இரு கைகளாலும் இறுகப் பிடித்து, இழுத்து அணைத்தான்! வாஞ்சையோடு பஞ்சணையில் உட்கார வைத்தான். அவன் மார்பை மறைத்திருந்த காவியுடை தரையிலே நழுவியது! வாழைக்குருத்து நிகர் அவள் வண்ணமேனி, அவன் அணைப்பிலே துவண்டது!

அவளை விட்டு அவன் பிரியும் போது அதிகாலை மணி நான்கு! அவனே சுளர்ந்த உடலோடு தள்ளாடியபடியே படிக்கட்டிலே இறங்கினான்! அவள் நிலையோ, தாறுமாறாகக் கிடந்த பஞ்சணையில் நெற்றியினின்றும் வழிந்த வியர்வையினால் குங்குமம் அழிந்து, கசங்கிய மலர்மாலையாக விசும்பின் துளி நனைத்த மென்துகிலாகக் காட்சியளித்தாள்!

காலை மலர்ந்தது! கல்யாண வீட்டிலிருந்து அவள் தாயும்,தந்தையும் திரும்பி வீடடைந்தனர். வாசற்கதவு மூடியிருந்தது. கதவைத் தட்டினர். அது தானாகவே திறந்துகொண்டது. நாலடி உள்ளே நடந்துசென்றனர். 'குப்'பென்று வீசிற்று 'பிண' வாடை! அந்தப் பெரிய வீட்டின் நடு அறைக்கு வந்து நின்றனர். கழுத்திலே சுருக்கிட்டுக் கொண்ட ஒரு உருவம் உத்திரத்திலே ஊஞ்சலாடியது!

"அய்யோ என் அம்மா!" என்றவாறு அலறி ஓடிக் கயிற்றிலே தொங்கும் தன் ஒரே மகளின் கால்களைப் பிடித்தார் தந்தை. குழந்தை போல் கூவிக் கூவி அழுதார். அரற்றினார். அந்த வீடே அதிர்ந்தது! அவளைப் பெற்ற தாய் அப்போதே மயங்கித் தரையிலே சாய்ந்தாள்!

ஆம், சோகம்! சோகம்! தாலியணியப் பெற்ற தையலர் எவருக்கும், காலையெலாம் பூரிப்பு! பகலெலாம் சலிப்பு! மாலையெலாம் மயக்கம்! இரவோ - இன்பம்! இன்பம்!

மங்கல நாண் அறுபட்டுப் பருவத்தின் பிடியிலே சிக்கிய இளமகளிர் யாருக்கும், என்றும் எப்போதும் தான் பெறமுடியாத 'அந்த' ஒரே எண்ணம்! உண்ணவேண்டும்- உடுக்க வேண்டும்-உயிர் வாழவும் வேண்டும், ஆனால், உணர்ச்சியை மட்டும் இழந்துவிட வேண்டும். ஆம்! துன்பம்-துன்பம்! சொல்ல முடியாத துன்பம்! துன்ப வெள்ளம்! ★

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்! அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 4 ‖ 27—7—57 ‖ இதழ் 4

டாக்டர் 'நாயுடு'

●

பள்ளியிலே பயில்கின்ற வேளையிலும்
பொதுவாழ்வில் பங்கு கொண்டு
துள்ளியொரு போர்மேவிச் சிறைசென்ற
தூயவனே! தமிழர் நாட்டில்
கள்ளமனம் கொண்டோர்தம் இனங்காக்கக்
காங்கிரசில் சேர்ந்த நாளில்
உள்ளிருந்தே போராடி உதைதந்து
ஓடவைத்தாய்! உண்மை! உண்மை!

ஒருகுலத்துக் கொருநீதி உரைத்தமனு
நீதியினை உவந்து போற்றி
குருகுலத்தில் அதைக்கொண்டு குறுக்குவழி
புகுத்திய வ. வே. சு. ஐயர்
மருமனத்தை ஊரறிய நீசெய்தாய்
மாத்தமிழர் பெருமை பெற்றாய்!
திருவிளக்கின் ஒளிசாய்ந்தாற் போற்சாய்ந்த
தென்னவனே! வாழி! வாழி!

"வெஞ்சிறைகள்! கொடுங்கோன்மை! வேரறுக்கும்
போர்முழக்கம் இவைக ளெல்லாம்
நெஞ்சுரத்தை மாற்றுமெனில் நீதியெலாம்
சுடுகாடு நோக்கிச் செல்லும்!
அஞ்சுவதேன்! செந்தமிழீர்! அன்னியர்க்கு
நாமடிமை அல்லோம்! அல்லோம்!
கெஞ்சுவதோ! தாள்பணிந்து கேட்பதுவோ
தாயகத்தின் சுதந்திரந்தான்!

போர்புரிவோம்! வருக"வெனப் புலிபோல
நீசெய்த முழக்க மெல்லாம்
பாரறியும்! ஊரறியும்! பகுத்தறிவோர்
நெஞ்சறியும்! பழமை யென்னும்
வேரழித்த கொற்றவனே! வேறானாய்!
நீறானாய்! விந்தை யானாய்!
நீறான போதிலுமெம் நெஞ்சானாய்;
நினைப்பானாய்; நிலையே ஆனாய்!

—கண்ணதாசன்

சட்டசபையில் அண்ணா

"'இந்தத் தலைமுறையினர்தான் கடைசித் தலைமுறை அரிசன மக்கள்; தாழ்த்தப்பட்ட மக்களின் கடைசித் தலைமுறையினர்; இனிமேல் ஏற்படக்கூடியவர்கள் எல்லோரும் தமிழர்கள்—ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்' என்கிற விதத்திலே, ஏதாவது செய்ய வேண்டும்.

"கலப்புத் திருமணத்தைப்பற்றி இங்கே வலியுறுத்தப்பட்டது.

"கலப்புத் திருமணத்தை ஆதரிப்பதற்குமுன் மற்றொன்றையும் யோசித்துப் பார்க்கவேண்டும். கலப்புத் திருமணத்தை செய்துவிட்டு, அதற்குப் பிறகு, 'இத்திருமணத்தின்மூலம் பிறக்கும் குழந்தைகள் சமுதாயத்தில் எப்படி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்' என்கிற பிரச்சினையை நாம் தீர்க்கவேண்டும்.

"சமுதாயத்தில் சாதி மனப்பான்மையை ஒழித்து சாதிப் பாகுபாடுகளையும் நீக்கவேண்டும். சாதிப் பாகுபாட்டை யார் ஆதரித்தாலும் சரி--எந்த உரிமையின் பெயரால் ஆதரித்தாலும் சரி-எத்தனைபழைய ஏடுகளை எடுத்துக்காட்டினாலும்சரி, சாதி பேதம் கூடவே கூடாது.

"இந்தச் சமுதாயத்தின் சாதி மனப்பான்மை மாற்றப்பட்டால் ஒழிய, கலப்புத் திருமணத்தால் பிறக்கின்ற குழந்தைகள் தாங்கள் மணம் செய்துகொள்ளுகின்ற நேரத்தில் நல்லபடியாக சமுதாயத்தில ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.

"ஆர்வத்தின் காரணமாக கலப்புத்திருமணம் செய்துகொண்டு, பின்னர் அதன்மூலம் பிறக்கின்ற குழந்தைகள், சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத நிலைமை நீடித்தால், பிரச்சினை தீர்ந்துவிட்டதாகக் கருதமுடியாது.

"ஆகவே, கலப்புத் திருமணம் அதிகமாகப் பரவ வேண்டுமானால் அடிப்படையிலே நாட்டிலுள்ள சாதி மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டுமென்பதை அறிவும், ஆர்வமும் உடைய அமைச்சருக்கும், இப்பேரவையின் உறுப்பினர்களுக்கும் சபாநாயகரின் மூலமாக கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"கலப்புத் திருமணம் என்பது இலட்சியத்திற்காகச் செய்யப்படுவது மாத்திரம் அல்லாமல், நம் சமுதாயத்தையே மாற்றியமைக்க எடுத்துக்கொள்ளப்படுகிற ஒரு தேசிய முயற்சியாக இருக்கவேண்டும். இந்த தேசிய முயற்சி, முயற்சி அளவிலே இல்லாமல் நிச்சயமாகச் செயல்படவேண்டும்; அப்போதுதான் நிச்சயமாக சாதிபேதத்தை ஒழிக்க முடியும். ஆகவே, உடனடியாக சாதிபேதத்தைப் போக்குவதற்காக அல்ல, சீர்திருத்தப் பிரச்சாரத்தில் நாட்டை ஆளுகின்ற சர்க்கார்—சகல துறைகளிலும் திட்டங்களிலும்—ஈடுபட்டாக வேண்டும்.

"சாதியை உண்டாக்கியவர்கள் திருந்தி விட்டார்கள்; உலகப் போக்கை உணர்ந்து மாறிவிட்டார்கள். ஆனால், இதர சாதிக்காரர்களால் விளையும் 'தொல்லைதான் அதிகம்' என்பதாக ஒரு உறுப்பினர் குற்றம் சாட்டினார். அது உண்மைதான்.

"சாதிப் புற்று தோன்றிவிட்டதால், அதிலே தோன்றியவை பலப்பல இன்றைக்குக் கிராமப்புறங்களிலே தம் தம் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்குப் போராடத்தான் போராடுகின்றன. தூங்கிக்கொண்டிருப்பவனைத் தேளும் கொட்டும்—பாச்சையும் கடிக்கும்; ஏமாந்தால் பாம்புங்கூட காலைச் சுற்றிக்கொள்ளும். இவற்றில் எதற்குக் கொடிய விஷம் அதிகம் என்பதல்ல பிரச்சினை; எந்தப் புற்றிலிருந்து அவை வெளிப்பட்டவை எனக் கண்டுபிடித்து அந்தப் புற்றையே அழித்தால் ஒழிய, அதிலிருந்து கிளம்புகின்ற விஷஜந்துக்கள்—தேள், பாச்சை, பாம்பு—நாட்டிலே பரவிக்கொண்டுதான் இருக்கும். புற்றையே அழிக்கும் வேலையில் மிக மிகத் துரிதமாக நாம் ஈடுபட்டாக வேண்டும்.

"ஆண்டவன் எத்தனையோ பெரிய திருவிளையாடல்களைப் புரிந்திருக்கிறான் என்பதை, புராணங்களைப் படித்து அறிந்துகொள்ளலாம்; 'பலப்பல திருவிளையாடல்களைப் புரிந்த ஆண்டவன், இந்த நூற்றாண்டிலே ஒரு புதிய திருவிளையாடலை புரியமாட்டானா? ஒருநாள் இரவு தூங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், நம் வீட்டிருந்து நாலைந்து பேர்கள் அவர்கள் வீட்டிற்கும், அவர்கள் வீட்டிலிருக்கும் நாலைந்து பேர்கள் நம்முடைய வீட்டிற்கும் வந்துவிட்டால், விடிந்து பார்க்கும்போது இரண்டு பேர்களும் ஒன்றாகச் சேர்ந்து கலந்துவிட்ட திருவிளையாடலை ஆண்டவன் புரிய, அதைக் காண்பவரில் நான் முதல்வனாக இருக்கமாட்டேனா?"-என்று கனவு காண்பது உண்டு.

"ஆனால் அந்த ஆண்டவன் தம்முடைய திருவிளையாடல்களை பத்தோடு நிறுத்திக்கொண்டுவிட்டான். மனிதர்கள்தான் அதைப் போல் இப்போது செய்யவேண்டும். இப்படிச் செய்வதற்கு இந்த மந்திரிசபையைவிடத் திறமையான மந்திரிசபை காங்கிரஸ் கட்சியிலேயே இல்லை என்று சொல்லிக் கொள்ளப் பெருமைப்படுகிறேன்.

(அரிஜன முன்னேற்ற மான்ய கோரிக்கை விவாதத்தின்போது ஆற்றிய உரையில்.)

எஸ். ஏ. பி.... .

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

அதற்குப் பிறகு ஒன்றரை ஆண்டுகள் கழித்துத்தான் அஞ்சலையும், வடிவேலுவும் சந்திக்க முடிந்தது! எழுத்து வடிவில் இரண்டு வார்த்தைகளுக்குள் அடங்கிவிட்ட ஒன்றரை ஆண்டுகள், அஞ்சலைக்கும் வடிவேலுக்கும் அவ்வளவு சாதாரணமாகவா இருந்தன! கண்ணீர் பெருக்கிய இரவுகள், கலங்கித் தவித்த நேரங்கள், உண்ணுமற் கழித்த பொழுதுகள், உயிர்வதையோடு கடிதத்தை எதிர்பார்த்த நாட்கள்—ஆம்; ஒரு நாவலாசிரியனின் ஏழு நாவல்களுக்கு வேண்டிய கருப்பொருள்கள் அந்தப் பதினெட்டு மாதப் பிரிவில் அடங்கிக் கிடந்தன! அதற்குப் பிறகு வடிவேலு கிராமத்திற்குத் திரும்பிய நேரத்தில் அஞ்சலை புது மணப்பெண்ணாகக் காட்சியளித்தாள்.

சென்னை 'கேம்ப்'பில் வேகாத முருங்கைக் காயையும், அழுகிப் போன கத்தரிக்காயையும், நாற்றம்பிடித்த கருணைக்கிழங்கையும் கண்ணை மூடிக்கொண்டு தின்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்ந்திருந்த வடிவேலுவுக்கு, அவள் கொண்டு வந்திருந்த பணத்திலேயே கறியும், மீனும், முட்டையுமாகச் சமைத்துப் போட்டு அவன் சாப்பிடுவதைக் கண்ணால் கண்டாள் அஞ்சலை. ஒவ்வொரு இரவிலும் தன் வாழ்க்கையை அவளுக்குக் கதை கதையாகச் சொல்லுவான் வடிவேலு. தனக்கு மாதம் பதினெட்டு ரூபாய் படி என்று கொடுத்து, அதில் பதினைந்தரை ரூபாயை அதிகாரிகள் பிடித்துக் கொள்வது பற்றியும், குடும்பம் நடத்த அனுமதி மறுப்பது பற்றியும், அதிகாரிகளுக்கு நல்ல பிள்ளையாக நடப்பதிலிருந்து கொஞ்சம் வழுகினுல் இரகசிய 'பைலி'ல் எழுதிவைத்து எதிர்காலத்தைப் பாழடிப்பது பற்றியும், கடுமையான தண்டனைகள் தருவது பற்றியும் கதை கதையாகக் கூறுவான். மந்திரியிடம் குறைகளைச் சொன்னுல் அதற்கும் தண்டனை கிடைக்கும் 'பெருமை'யை விளக்குவான். 'கமாண்டெண்டு'களும், மற்றைய அதிகாரிகளும் காய்கறி முதற்கொண்டு சுரண்டிக்கொண்டு போவதையும், போலீசாரின் வயிற்றில் மண்ணடிக்கப்படுவதையும் அவன் கூறும்பொழுது அஞ்சலை அழுதுவிடுவாள். ஒருவன் வாழ்க்கையைப் பறித்துத்தான் இன்னொருவன் வாழ்க்கை நடைபெறவேண்டும் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். நல்ல அரசாங்கங்களில் தான் சுரண்டல் இல்லாத வாழ்க்கை அமையும். காங்கிரஸ் அரசாங்கத்தில் ஒருவனை ஒருவன் பிடுங்கித் தின்றுலொழிய வாழ்க்கை தேருது. இந்தப் பிடுங்கல் சமுதாயத்தை அறியாத காரணத்தால், அவர்கள் சுரண்டலை எண்ணிக் கலங்குவார்கள். அதன்றியும் அமைதியாகப் போராட்டம் நடத்தும் எதிர்க்கட்சிக்காரர்கள்மீது, கடுமையான தாக்குதல் நடத்தவேண்டியிருப்பதையும் அவன் அவளுக்குக் கூறுவான். எங்களை வாழ விடாத அரசாங்கத்தை நாங்கள்தான் வாழவைக்க வேண்டியதிருக்கிறது என்பான். போலீசார் இல்லை என்றுல் இன்றைய அரசாங்கம் இல்லை என்கிற உண்மையையும் விளக்கமாகக் கூறுவான். அஞ்சலை இவ்வளவையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, "நீங்களெல்லாம் கூடி, இதை எழுதி மந்திரிக்கு அனுப்பினுலென்ன?" என்று கேட்பாள். அவள் பாவம்! காது செவிடாகி, கண் குருடாகி, கை முடமாகி, மூளை பழுதாகி, இருதயம் மரத்துப்போனவர்கள் தான் காங்கிரஸ் மந்திரிகளாக வருகிருர்கள் என்பது அவளுக்கு எங்கே தெரியும்!

வடிவேலு எஸ். ஏ. பி. யில் சேர்ந்த பிறகு கிடைக்கும் இரண்டாவது பதினைந்து நாட்களை அவர்கள் இன்பமாக அனுபவித்தார்கள். அந்த இன்பத்தின் சின்னமாக உருவாகி வந்தான் சின்னையா. சின்னையா பிறந்து ஓராண்டு கழித்துத்தான் வடிவேலு மறுபடியும் கிராமத்துக்கு வரமுடிந்தது. பிள்ளையோடு, மனைவியோடு பொழுதுபோக்கி, மீண்டும்சென்னைக்குத் திரும்பிய வடிவேலுவின் வாழ்க்கை சோகமயமாக மாறிற்று. ஆம்! அதற்குப் பிறகு கடிதங்கள் சந்திப்பதைத் தவிர அவனும் அஞ்சலையும் சந்திக்கும் வாய்ப்பே ஏற்படவில்லை. மூன்று ஆண்டுகள் இருள்வடிவில் கழிந்தன.

தான் நாகாமலைப் பகுதிக்குப் போவது பற்றி அஞ்சலைக்குக் கடிதம் எழுதிய வடிவேலு, தன் குடும்ப நலன் பற்றிய பதில் வரும், பதில் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சின்னையாவின் காலில் வண்டி ஏறியதோ, அஞ்சலை புத்தூருக்குப் புறப்பட்டதோ அவனுக்குத் தெரியாது.

மூக்கையக் கோனுர் தந்த இருபது ரூபாயில், ஒன்பது ரூபாய்க்கு 'டிக்கட்' எடுத்துக் கொண்டு, பதினேரு ரூபாயை மடியில் கட்டிக்கொண்டு பிள்ளையும் கையுமாய் ரயிலில் வீற்றிருந்தாள் அஞ்சலை. கால் வேதனை தாங்காமல், சின்னையா கதறுவான். காப்பியும், ரொட்டியும், பழமும் வாங்கிக் கொடுத்து எவ்வளவோ சமாதானம் செய்து பார்ப்பாள். பசியினுல் வரும் அழுகையைப் பழங்கள் அடக்கிவிட முடியும். கால் வேதனையைத் தீர்க்க அவற்றிற்குச் சக்தி ஏது? சின்னையாவின் கதறலைச் சமாளிக்கமுடியாத அஞ்சலை, தானும் கதறுவதைத் தவிர வேறு வழியில்லாமலிருந்தது. ரயிலில் கூட இருந்த பெண்கள் அடிக்கடி முகத்தைச் சுழித்துக் கொள்வதும் 'சனியன், இந்தக் கத்துக் கத்துது!' என்று திட்டுவதும் அஞ்சலைக்குத் தெரிந்தது. அவள் என்ன செய்ய முடியும்! அதைச் சகித்துக் கொண்டாள். இரவு எட்டரை மணிக்கு திருச்சி ஸ்டேஷனுக்கு ரயில் வந்ததும் தயிர் சாதம், சாம்பார் சாதம் வாங்கி மகனுக்கு ஊட்டினுள். சிறிது நேரத்தில் சின்னையா அமைதியாகத் தூங்க ஆரம்பித்தான். அஞ்சலை, தான் கொண்டு வந்திருந்த பழஞ்சேலையைக் கீழே விரித்துச் சின்னையாவை அதில் தூங்க வைத்தாள். காலையில் விழுப்புரத்தில் இறங்கி காட்பாடி வண்டியில் ஏறினுள். காட்பாடியில் இறங்கி, பஸ்ஸும் நடையுமாக மத்தியானம் ஒரு மணிக்குப் புத்தூர் வந்தடைந்தாள். சின்னையாவைத் தோளில் சாத்தியவண்ணம் ஆஸ்பத்திரிக்குள் நடந்தாள். அங்கே எல்லா முகங்களும் பாராமுகமாகவே இருந்தன. ஒவ்வொருவராக விசாரித்துக் கடைசியில் பெரிய வைத்தியரிடம் போய்ச் சேர்ந்தாள் அஞ்சலை. அந்த வைத்தியர் கொஞ்சம் கண்டிப்பானவர். கடுகடுப்பான குரலுடையவர். ஆனலும் பிள்ளைகுட்டிக்காரர். அதனல் அஞ்சலையின் கண்ணீருக்கு இறங்கினர். சின்னையாவின் கால் கட்டை அவிழ்த்துப் பார்த்தார். அரைமணிநேர சோதனைக்குப் பிறகு மெதுவாக 'இந்தக் காலையே வெட்டி எடுக்கவேண்டி வரும்' என்ருர். அஞ்சலையின் தலை சுற்றிற்று. 'ஓ'வென்று அலறினுள். அருகிலிருந்த ஊழியர்கள் அவள் வாயைப் பொத்தினர்கள். கடைசியில் 'வேறு வழி இல்லையா ஐயா?' என்று கேட்டாள் அஞ்சலை. 'இப்படியே வைத்தியம் பார்க்கிறதாக இருந்தால் பையன் படுக்கையை விட்டு எழுந்திருக்க ஆறுமாசம் ஆகும்' என்ருர் வைத்தியர். 'பரவாயில்லை ஐயா!' என்றுள் அஞ்சலை. 'செலவுக்குப் பணம் வச்சிருக்கியா?' என்று வைத்தியர் கேட்டார். அஞ்சலை அதிர்ச்சி அடைந்தாள். 'பையனின் காலை வெட்டாத இருந்தாச் செலவு அதிகம் ஆகாதா?' என்று கேட்டாள். 'அப்பவும் ரெண்டுமாசம் ஆகும்' என்ருர் வைத்தியர். அஞ்சலைக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படி இருந்தாலும் பணம் தேவை. இரக்கப்பட்ட மூக்கையக் கோனுர்தான் இருபது ரூபாய் கொடுத்தார். இப்போது யார் கொடுப்பார்கள்? அஞ்சலை 'தட'ரென்று கீழேவிழுந்து, டாக்டரின் காலைப் பிடித்துக்கொண்டாள். தன் நிலையைச் சொல்லி அழுதாள். டாக்டர்தான் என்ன செய்வார்? 'வைத்தியம் வேணும்னுலும் இலவசமாகப் பார்த்திடறேன் அம்மா; தங்கி இருக்கிற செலவுக்கு என்ன செய்வே?' என்று கேட்டார். 'ஏதாவது வேலை குடுங்கய்யா; பார்க்கிறேன்' என்றுள் அஞ்சலை. அவள் அழுவதைப் பார்த்து 'அம்மா! அம்மா!' என்று புலம்பினுன் சின்னையா. இந்த யோசனைக்கு வைத்தியர் இணங்கக்கூடியவராக இல்லை. 'அது நம்மால முடியாது அம்மா! ஆஸ்பத்திரியில் நிறைய ஆட்கள் இருக்கிருர்கள்' என்று கூறிவிட்டார். 'ஐயா! உங்களைக் கும்பிடறேன். பையனுக்குமட்டுமாவது நீங்கள் கொஞ்சம் கொஞ்சம் கஞ்சி கொடுங்க. நான் எங்கயாவது வேலை பார்த்துக்கிறேன்' என்றுள். வைத்தியர் யோசித்தார். அதற்குள் அங்கே நின்ற நர்ஸ் 'கொடுக்கலாம் சார்' என்ருள். அவள் பெண்ணல்லவா! ஒருவழியாக வைத்தியர் சம்மதித்தார். அஞ்சலை அந்த நர்சின் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். 'அம்மா! பையனைக் கொஞ்சம் பார்த்துக்கங்க; நான் போய் எங்கயாவது வேலை பார்த்து வாரேன்' என்று கூறிய அஞ்சலை, ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினுள். புத்தூரிலிருந்து சில கற்கள் தூரத்திலிருந்த வேலூரில்தான் ஏதாவது வேலைகிடைக்கமுடியும். சில வழிப்போக்கர்களிடம் இதைத் தெரிந்துகொண்ட அஞ்சலை, மெதுவாக வேலூரை நோக்கி நடந்தாள். சிறிதுதூரம் சென்றதும் அங்கு ஒரு போலீஸ் 'வேன்' நிற்பதைக் கண்டாள். அந்த 'வேனி'ல் அப்பொழுதுதான் போலீசார் ஏறிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாகக் கிராமத்து வயலில் 'டியூட்டி' செய்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அஞ்சலை அவர்களில் ஒருவரைப்பார்த்து 'ஐயா! என்னை வேலூர் வரையில் கொண்டுபோய் விட்டுடுங்களேன்' என்ருள். 'இது பஸ் இல்லை அம்மா! போலீஸ்வண்டி' என்று சொல்லிவிட்டு அவர் உள்ளே ஏறினர். முன்சீட்டில் உட்கார்ந்திருந்த அதிகாரி 'ரைட்' என்ருர். 'வேனி'லிருந்த வட்டத்தின் வழியாக, இரண்டு கண்கள் அஞ்சலையைக் கூர்ந்து கவனித்தன. சிறிதுநேரத்தில் 'அஞ்சலை' என்று கூவும் குரல் கேட்டது. 'மச்சான்' என்று கதறினுள் அஞ்சலை. 'வேன்' பறந்து விட்டது.

(தொடரும்)

வெண்பாப் போட்டி

1

ஈற்றடி : **பள்ளியறைக் குள்ளே பகை**

முடிவு தேதி 10-8-57

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

மேயரும் பந்த்தும்

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கருத்தை வெளியிடுகிறது என்பதற்காக, அதனைக் கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்பதையே தங்கள் 'பிறவிப் பயனு'கச் சிலர் கருதி வந்துள்ளனர். குறிப்பிடப்படுகிற கோட்பாடுகள், செயல்படுத்தப்படும் நடைமுறைகள் உண்மையின் அடிப்படையிலேயும், நியாய வழியிலேயும் அமைக்கப்பட்டிருந்தும், தங்கள் கண்டனக் கணைகளை ஏவிய வண்ணம் அவர்கள் இருந்து வந்துள்ளனர். வேறு சிலர், கழகத்தின் பெயரிலுள்ள 'திராவிட'த்தைப் பற்றியேகூட வெட்டியான ஆராய்ச்சியில் காலத்தைக் கழித்துத் தங்களை 'மேதை'களாகக் காட்டிக் கொள்ள முயன்றுவந்துள்ளனர்.

இந்த எல்லா வகையினரும் அதிசயிக்கும் வண்ணம், அண்மையில் நிகழ்ந்த செய்தி ஒன்று நாட்டவருக்குக் கிடைத்துள்ளது. தென் மண்டல அமைப்புக் கூட்டத்திற்கு வந்த மத்திய உள்நாட்டு அமைச்சர் பண்டித கோவிந்த வல்லபந்த் அவர்களை வரவேற்றுப் பேசிய நமது சென்னை நகரசபைத் தலைவர் திரு. கே. என். சீனிவாசன் அவர்கள் மிகத் தெளிவான, மறுக்கமுடியாத கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்:

"தென் மண்டல மாநிலங்கள் மூன்றும் (சென்னை, ஆந்திரம், கேரளம்), இப்பொழுது மேற்கு மண்டலத்தில் இணைக்கப்பட்டிருக்கும் மைசூரும் ஆக, நான்கு தென்னுட்டு மாநிலங்களும் ஒரே கலாச்சாரப் பகுதியாகும்; அந்த மாநிலங்கள் திராவிட கலாச்சாரமுடையவையாகும். இந்த நாடு திராவிட நாடாகும்.

தென்னுட்டு மாநிலங்கள் நான்கிலும் ஒரே வகையான பழக்க வழக்கங்கள்தான் நிலவுகின்றன."

திரு. சீனிவாசன் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர். மக்கள் அன்பிற்கும், காங்கிரஸ் கட்சியாளர் மதிப்பிற்கும் பாத்திரப்பட்டவர். அப்படிப்பட்ட ஒருவர், இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை எதைச் சொல்லி வந்திருக்கிறதோ, அதனையே வலியுறுத்திக் கூறுவதை நல்ல மனம் படைத்தவர்கள் எவரும் பாராட்டாமலிருக்க முடியாது.

இந்த வரவேற்புக்குப் பதிலளித்த அமைச்சர் பந்த் அவர்கள் **"இந்தியாவில் வேறெங்கும் நிலவும் கலாச்சாரத்தினை விட இந்தச் சென்னையின் கலாச்சாரத்திற்குத்தான் நான் அதிகமான முக்கியத்துவமும் மதிப்பும் தருகிறேன். சென்னையின் கலாச்சாரம் திராவிடக் கலாச்சாரம்"** என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய தினம், வடநாட்டு ஆதிபத்தியத்தின் உண்மையான 'நவாப்'பாக செயல்பட்டுக் கொண்டிருப்பவர் மதிப்பிற்குரிய பந்த் அவர்கள்தான். இன்றளவும் நடைபெறமுடியாத அனைத்திந்திய ஒற்றுமைக்கு கூக்குரலிட்டுக் கொண்டிருப்பவரும் அவரேதான்! அப்படிப்பட்ட பந்த், இப்படிப் பேசியிருப்பது எப்படிப்பட்ட கருத்தை உள்ளடக்கியதாலும் நம்மைப் பொருத்தமட்டில் நமது இலட்சியத்தில் நமக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை, மேலும் ஊக்குவிக்கும் வகையிலேயே அமைந்துவிட்டிருக்கிறது என்பதில் ஐயமிருக்க வழியில்லை.

கே. என். சீனிவாசன்
கோவிந்த வல்லபந்த்

இந்த இருவரும் குறிப்பிட்டுக் காட்டியுள்ள பேச்சுத் தொடர்கள் திராவிடம், அனைத்திந்தியாவுக்கும் மாறுபட்ட கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் உள்ளடக்கியது என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

இந்திய ஒற்றுமை
இந்தியக் கலாச்சாரம்

என்பவை எல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்களே தவிர உண்மை அல்ல என்பதற்கு அவர்களது இந்தக் கருத்துக்கள் சான்ருக நின்றுகொண்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் நையாண்டி செய்யப்பட்ட பல இலட்சியங்கள், நடைமுறைக்கு வந்ததும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதை வரலாறு காட்டாமற் போகவில்லை. 'பகற் கனவு' என்று பரிகசிக்கப்பட்ட பாக்கிஸ்தான், இன்று உலக நாடுகளில் ஒன்ருகப் பவனி வருவதை அவ்வளவு எளிதில் மறந்துவிடமுடியாது.

அதுபோலவே, திராவிட தனிநாட்டுக் கோரிக்கையை ஒப்புக்கொள்ள மறுக்கும் வடநாட்டு ஆதிபத்திய அமைப்பான காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த வடக்கத்தியச் சீமானும், தென்பகுதிப் பெருநகரத் தலைவரும் இப்போது அதனுடைய கலாச்சார மகிமையையும், பண்பாட்டு எழிலையும் எடுத்துகாட்ட முன்வந்திருப்பது, நமது இலட்சியம் கானல் நீரல்ல என்பதையே சொல்லாமற் சொல்லிக் கொண்டிருக்கிறது. ★

சென்னை, எழும்பூர்
மியூஸியம் தியேட்டரில்
28-7-57 ஞாயிறு மாலை
6-மணிக்கு
கண்ணதாசன் அவர்கள்
தலைமையில்
நண்பர்கள் கலைமன்றத்தார் நல்கும்
வே. கபிலன் எழுதிய
"சாகாவரம்"
[நாடகம்]
கட்டணம்:
ரூ. 3, 2, 1, அணு 8.

தமிழன்பர்களே! மாணவர்களே! ஏஜண்டுகளே!

முல்லை | REGD. M. 6921

ஆசிரியர்: **கண்ணதாசன்**

உங்கள் வேண்டுகோளின்படி, எட்டணு விலையில் டெம்மி அளவில், மிகுந்த கவனத்தோடு கொண்டு வரப்படுகிறது!

எட்டணு விலையில் **முல்லை**
கண்கவர் மூவண்ண **முல்லை**
கவிதை தரும் **முல்லை**
டெம்மியில் **96 பக்கங்கள்**

ஆகஸ்ட் 30உ யன்று எங்கும் கிடைக்கும்!

12 பக்கங்களில் **திரைக் காட்சிகள்** இடம் பெறும்!

கண்ணதாசன் கவிதை - பன்மொழிப் புலவர் ஆராய்ச்சி-புதிய துணுக்குகள் - இலக்கியம் — மொழிபெயர்ப்பு —

பழைய ஏஜண்டுகளின் கணக்குகள் தீர்க்கப்பட்டு விட்டதால், **எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டு தேவை.**

பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் முன்பணம் கட்டிப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தென்றல்

— வார ஏடு —

அடுத்த இதழிலிருந்து

12 பக்கங்கள் :: **16 காசு**

வெண்பாப் போட்டி துவங்குகிறது!

முழுக்க முழுக்க இலக்கியம்!

"கவிதையிலே காளான்கள்" என்ற தலைப்பில், புதுமைப்பித்தன் கவிதைகளை, 'கண்ணதாசன்' ஆராய்கிருர்.

காலங் தப்பாது வரும் — 'எண்ணம்' கவிதையிலேயே வரும்!

விலை 16 காசு

ஏஜண்டு இல்லா ஊரில் ஏஜண்டு தேவை.

ஏஜெண்டுத் தோழர்கள் பில்பாக்கிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்புவது நீடித்த தொடர்புக்கு ஏதுவாகும்.

எழுதுக:

தென்றல் : முல்லை :: சென்னை-6.

குறிப்பு:—ஜூலை முடிய உள்ள பில் பாக்கிகளை, ஆகஸ்ட் 10-ந் தேதிக்குள் அனுப்பி வைக்காத ஏஜெண்டுகளின் விற்பனை உரிமை முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

எண்ணியுள்ளனர். தமிழ் நெடுங்கணக்கில் இல்லாத, தமிழ் இலக்கணங்கள் அறியாத, தமிழ் இலக்கியம் கனவு காணாத நான்கு வடமொழி எழுத்துக்களை (ஃக = ஹ, ஃச = ஸ, ஃட்ச = ஷ, ஃச்ய = ஜ) அருந்தமிழ் நெடுங்கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் தமிழ் எழுத்துக்களுக்கு ஒரு புதிய தலைவிதி அமைக்க முன்வந்திருக்கிறார்கள். தம் புராணக் கருத்துப்படி தமிழைக் கீழோர் மொழிகள்-அரக்கர், அசுரர் மொழிகளுள் ஒன்றாகக் கருதுவதனால் தம்தெய்வ உலக மொழியாகிய வடமொழியின் முத்திரையில்லாமல் தமிழ் மனித மொழியின் தரம் கடந்து அரசியல் மொழியாக முடியாது, ஆகக்கூடாது என்று துணிகின்றனர் போலும்!

வடமொழிப் பற்றின் போர்வையில், தாய்மொழி வளர்ச்சிகளுக்கு குந்தகம் செய்யும் குழுவினரின் ஒவ்வொரு சொல்லும், செயலும் உண்மையில் ஒட்டகத்துக்கு இடங் கொடுத்து, கூடாரத்தையே பறிகொடுத்த அராபியன் கதையை நினைவூட்டுவதாகும். வடமொழி இலக்கியங்களை—பெரும்பாலும் பொதுமக்களை மயக்கி வசப்படுத்த உதவும் சமயசாத்திர ஏடுகளை—மொழிபெயர்த்து அதுவே இலக்கியம் எனக் கொண்டு, பேணிப் பரப்பி வடமொழிப் புகழை மறைமுகமாக வளர்ப்பது முதற்படி, ஒட்டகத்தின் மூக்குக்கு இடம் தேடும் படி. வடமொழிச் சொற்களையே கையாண்டு தாய்மொழிகளிலே வடமொழி முத்திரைத் தழும்புகளைப் பெருக்கித் தாய்மொழியைத் தம் ஆட்சிக்குள் கொண்டுவந்து வடமொழிப் பிரச்சாரக் கருவிகளாக்குவது, அடுத்தபடி மூக்குமுகமாக விரிவுறும்படி. வடமொழிச் சொற்களைச் சரிவர எழுத வடமொழி எழுத்துக்களை ஒன்றொன்றாக, தொகுதி தொகுதியாக இறக்குமதி செய்வதே மூன்றாவது படி. அதன்பின், வடமொழி இலக்கியமும், சொல்லும் எழுத்தும் புரியவைப்பதற்காக, வடமொழி இலக்கணமும் வேண்டும் என்று கூறுகின்றபடி, ஒட்டகத்தின் திமிலை உள்ளே நுழைக்கும்படி ஆகும். இவ்வாறு வளருகின்ற பலவகைப் படிகளும், கடைசிப் படியில் கூடாரத்தை ஒட்டகத்துக்கே உரிமையாக்கி ஏழை அராபியனை வெளியேற்றிவிடுவது காண்கிறோம்.

குடியாட்சியின் விலை, ஓயா விழிப்பு என்பர் குடியாட்சி அறிஞர். குடியரசோ, விடுதலையோ பெற்றுவிட்டவுடன் மக்கள் அமைதி அடைந்துவிட முடியாது. ஏனென்றால் ஏகாதிபத்தியத்தின் சொந்த வடிவம் போன பின்னும், ஏகாதிபத்தியவாதிகள் குடியரசிலேயே இருந்துகொண்டு, குடியரசின் போர்வையிலேயே புதிய புதிய உருவில் ஏகாதிபத்தியப் பண்புகளை உருவாக்கி, குடியரசையும் மக்கள் உரிமைகளையும் மெல்லக் கவிழ்க்க ஓயாது சதி செய்த வண்ணம் இருப்பர். ஆகவே, மக்கள் உரிமை பேண விரும்புபவர் ஓயாது போராடிக் கொண்டே இருந்தாகவேண்டும்—ஏகாதிபத்திய மரபு ஒன்று எப்போதும் ஏமாற்றுவதற்கு இருந்து வருவதுபோல, மக்கள் உரிமை பேணி அதைக் கண்டு விளக்கி எதிர்க்கும் மரபு ஒன்றும் தொடர்பறாமல் ஓயாது பேணப்பட்டே வரவேண்டும். ஏகாதிபத்தியம், குடியாட்சி ஆகிய இவற்றின் இதே தொர்பு வடமொழிப் பற்று, தாய்மொழிப் பற்றாகிய தமிழ்ப் பற்று ஆகியவற்றுக்கும் பொருந்தும். வடமொழிப் பற்றாளர் மரபு, உலகிலேயே அடிமைப்பண்பு மறையும் வரை எளிதில் மறைந்துவிட முடியாது. பல உருவில், பல கோணங்களில் காட்சியளித்தவண்ணமாகவே இருக்கும். தாய்மொழி அல்லது தமிழ்மரபும் அதனுடன் அவ்வக் காலங்களில், அவ்வவ் வுருவில் போராடிக்கொண்டே தான் இருக்கவேண்டும். ஒரு கணம் போராடத் தயங்கினால், அல்லது போராட்டம் தளர்ச்சியடைந்தால்—போராட்டத்தில் மக்கள் சக்தி ஒன்றுபடாமல் பிளவுபட்டால்கூட-வடமொழிப் பற்றாகிய ஏகாதிபத்தியச் சக்தி, நெடுந்தொலை அழிவுத்திசை நோக்கி வளர்ந்துவிடும்.

மக்கள் உரிமை பேணும் அறிஞர், நல்ல தமிழார்வ அறிஞர் விளக்கினாலல்லாமல், ஏகாதிபத்தியப் போக்கையும், வடமொழிப் பற்றாளர் போக்கையும் மக்கள் தாமே எளிதில் அறிந்துகொள்ள முடியாது. ஏனெனில், முன் இந்த சக்திகளும் பல உரு எடுப்பவை மட்டுமல்ல, அவை தம் கோரத் திட்டங்களைச் சிறு சிறு கூறுகளாக்கி, படிகளாக்கி, மெல்ல மெல்ல, ஆனால் நீண்ட காலத் திட்டத்துடன் கொண்டு வருவர். ஒவ்வொரு கூறுகளையும் தனித்தனி காணும் மக்கள், திட்டத்தின் கோர அழிவை ஒரு சிறிதும் காணமுடியாமல் ஏமாறுவர். உண்மை நூலில் சிப்பு நூல் இணைத்து, சிப்பு நூல்வழி நூல் கயிறு, நூல்கயிறுவழி வடம், வடத்தின்வழி நூலேணி ஏற்றும் கதை ஒன்று உண்டு. இதன் ஒவ்வொரு படியிலும் காண்பவர் ஒரு சிறு சூதற்ற செயல் காண்பரேயன்றி, இறுதியாக நூலேணி ஏற்றப்படுவதை மனங்கொள்ளமாட்டார். வடமொழிப் பற்றாளர் செயலில் மக்கள் எளிதில் மயங்குவதன் வகை இது. இதனை மரபறுதி நின்றபடி நாளும் விளக்கும் அறிஞர் பொறுப்பு பெரிது. மரபறுதிருத்தலும் அரிது. ஏனென்றால், ஏகாதிபத்தியம், வடமொழிப்பற்று ஆட்சியிலிருந்து கொண்டு, அவர்களை அழித்து கங்காணி அறிஞர் மரபையே வளர்க்கும்.

தாய்மொழிப் பண்பு இந்தியாவின் மற்றெல்லாத் தாய்மொழிகளிலும், தமிழின மொழிகளில்கூட, ஓரளவு தளர்ந்துவிட்டது. தமிழகத்தில் தனித்தமிழ், அல்லது தாய்மொழிப் பண்பு வாய்ந்த தமிழ் ஆசிரியர் மறைமலை அடிகளின் தளராப் போராட்டம் காரணமாக, மக்கள் வாழ்விலும், ஆட்சித்துறை, செயலாக்குத் துறைகளில் அதன் எதிர்ப்பே நெடுங்காலம் தலைதூக்கி ஆடிவருகிறது. தொடர்ந்த அயலாட்சிகள், அயல் மொழி ஆட்சிகள், அயல் பண்பாட்சிகள், இதற்கு உகந்த சூழல்களாயுள்ளன. இப்போது மக்களிடையேயும், இலக்கிய வாழ்விலேயும், மொழிவாழ்விலேயும் தனித்தமிழ் அடைந்துவந்த வெற்றியைக் கருவறுக்கும் திட்டமாகவே வாழாமொழியின் எழுத்துக்களின் புகுத்தீடு மெல்லத் தலைகாட்டுகிறது.

இப்புகுத்தீட்டுக்கு வடமொழிப் பற்றாளர் கூறும் நியாயங்களை அலசிப் பார்த்து, அவற்றின் நேர்மை, நேர்மைக் கேடுகளை ஆராயவேண்டுவது இன்றியமையாதது ஆகும்.

(வரும்)



நான் கண்ட பெரியார்

யாரையோ பற்றி யாரோ எழுதுவதைவிட, எல்லோருக்கும் தெரிந்த தலைவரைப் பற்றி, அவரோடு பலகாலம் பழகிய ஒருவர் எழுதுவது வரவேற்கத் தக்கது தான்! ஆனால் அதற்காக, அவரிடத்திலுள்ள குறைபாடுகளையும், ஏற்றுக்கொள்ளமுடியாத பண்புகளையும் மட்டுமே எடுத்துக்காட்ட முனைவது விரும்பத் தக்கதல்ல.

பெரியார் ஈ. வெ. ரா.-செயற்கரிய செய்த, வியத்தகு தலைவர். ஈன்றெடுத்த அன்னை 'தாசி' என அழைக்கப்படும் இழிநிலையைப் பெருமையுடன் ஏற்றுக்கொண்டிருந்த திராவிடனுக்கு, இனஉணர்வு ஊட்டிய, 'உயர் எண்ணங்கள் மலரும் சோலை.' ஒப்பிலாத வழிகாட்டி.

கோவை அ. அய்யாமுத்து-சுயமரியாதை இயக்கம், காங்கிரஸ் கட்சி ஆகியவற்றில் பலரும் மதிக்கத்தக்கவராகத் தனிச் செல்வாக்கோடு உலவியவர். பெரியாரை முப்பது ஆண்டுகளாக அறிந்தவர். பத்து ஆண்டுகள் உடனிருந்து, நெருங்கிய தோழமை கொண்டிருந்த நண்பர். நேர்மையாளர் என்று பலரால் குறிப்பிடப்படுபவர்.

பெரியார்பற்றிய-அதுவும் அவர் கண்ட பெரியார் பற்றிய - புத்தகம் அது என்றதும், பெரியாரின் பெருந்தொண்டுகள் குறித்தும், பிறர்க்கு முன்மாதிரியாகத் திகழும் அவரது சுவை மிகு வாழ்க்கைச் சம்பவங்கள் பற்றியும் நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கும் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திரு. அய்யாமுத்து அவர்கள், 'கனி இருப்பக்காய் கவர்ந்தற்று' என்ற குறளுக்கே தம்மை எடுத்துக் காட்டாக்கிக்கொண்டார் என்று படித்தவர்கள் அனைவரும் கூறும் வண்ணம் அது அமைந்திருக்கிறது.

மொத்தத்தில் பெரியார் பற்றி மட்டுமில்லாமல் திரு. அய்யாமுத்து அவர்களைப் பற்றியும் நாம் கொண்டுள்ள நல்லெண்ணங்களை வேண்டிய மட்டும் குறைக்க நிச்சயமாக நூல் உதவுகிறது.

52 பக்கங்கள், விலை 75 காசு.

கிடைக்குமிடம்: **தமிழகம்,**
59, பிராட்வே, சென்னை-1.

★

சிந்தனையாளர் இங்கர்சால்

'கடவுள் மனிதனை உற்பத்தி செய்யவில்லை. மனிதன்தான் கடவுளை உற்பத்தி செய்தான்!

'நாம் கடவுள்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவை தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளட்டும். நாம் மனிதர்களைப்பற்றிக் கவலைப்படுவோம். மனிதர்களின் முன்னேற்றத்திற்காக வாழ்வோம். அவர்களின் இதயங்களில் இன்ப ஒளிவீசச் செய்வோம்!

'சிந்திக்க முடியாதவன் மனிதனைவிட மட்டமானவன். சிந்திக்க மறுப்பவன் தனக்குத் தானே துரோகம் செய்துகொள்பவன். சிந்திக்க அஞ்சுபவன் மூட நம்பிக்கையின் முழு அடிமை.'

-எனத்தகும் புரட்சிக் கருத்துக்களைத் தமது சொற்பொழிவுகள் மூலம் உலகுக்கு உரைத்த பேரறிஞர் ராபர்ட் கிரீன் இங்கர்சால்.

தந்தையாரின் கட்டளைக்குப் பயந்து, சிறுவயது முதலே வேதப் புத்தகத்தைப் பாராயணம் செய்து, அதன் மூலம் அதிலுள்ள அற்புதங்களை நம்பமாட்டாமல் 'நாத்திகர்' ஆனவர் அவர். தான் மட்டுமல்லாமல் பிறரும் அப்படி ஆகவேண்டும் என்பதற்காக ஆயிரமாயிரம் காரணங்களை அறிந்து, உரைத்து அது காரணமாகப் பலரால் வெறுத்தொதுக்கப்பட்டு செத்த பிறகு சிலை அமைக்கப்பட்டவர். என்றாலும் உயிரோடிருந்த காலத்தில் தமது ஈடு இணையற்ற சொற்பொழிவுகள்மூலம் மக்கள் இதயம் கவர்ந்தவர். அமெரிக்க குடியரசுத் தலைவர் அளவு சொற்பொழிவின்மூலம் வருவாய் உருவாக்கிக் காட்டியவர்.

அவரது வாழ்க்கை வரலாற்றினையும், ஒப்பற்ற கருத்துக்களையும் சுருக்கமாக, ஆனால் சுவையோடு எழுதியுள்ளார் தோழர் கே. ஜி. இராதாமணாளன். விரும்பிப் படிக்கத்தக்க நூல்களில் இதுவும் ஒன்று.

விலை ரூ. 1-25.

வெளியிட்டோர்:
பிரேமா பிரசுரம், சென்னை-24.

—தாமரை

சிரிப்புத்தான் வருகுதையா!

ரஷ்யாவில் பரபரப்பு. பெரிய பெரிய தலைகளெல்லாம் 'பெரியா'க்களாகின்றன. இங்கே 'ஜனசக்தி' மூச்சுவிடக் காணோம். மாஸ்கோ அறிக்கைகளை அப்படியே வெளியிட்டுக்கொண்டு மௌனம் சாதிக்கிறது. "'தப்பான' கனவு கண்டால் தாயிடமும் சொல்லாதே" என்பது போலவும், 'உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்தி' மாதிரியும் விழிக்கிறது. சொந்தத் தொல்லையே ஆயிரம் இருக்கையில், இந்தத் தொல்லையும் இந்தியப் பொதுவுடமையினரின் கழுத்தை அறுக்கிறது. கழுதைக்கு வாழ்க்கைப்பட்டபின் கவலைப்பட்டு ஆவதென்ன? வாங்கித்தான் தீரவேண்டும்!

இங்கே தொழிற் சங்கங்களிலும், விவசாய சங்கங்களிலும் தி. மு. கழகத்தார் வேறு ஈடுபடத் தொடங்கிவிட்டதால், கடைசி ஒட்டும் தீருகிற நிலையில் பொதுவுடமைக் கட்சி இருக்கிறது! இருந்தாலும் வாயும் கையும் நிற்கிறதா? அறுத்துப்போட்டவள் வாரிக் கட்டிக்கொண்டு 'அமங்கலிகள் சங்கம்' ஆரம்பித்த மாதிரி துள்ளிக் குதிக்கின்றனர் பொதுவுடமையினர். இலக்கிய, மொழிப் பேச்சுக்களின்மூலம்தான், மாணவர்களை தி. மு. க. இழுத்தது என்ற முடிவுக்கு வந்து, இப்போது இலக்கியத்தையும் 'கவனிக்க' ஆரம்பித்துள்ளனர், பொதுவுடமை நண்பர்கள் சிலர். இலக்கிய, மொழி, கலைத்துறைகளில் அதிகம் ஈடுபட வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டிருக்கிறார்களாம். ஓரளவு தப்பி உயிர் வாழ்ந்துகொண்டிருந்த இந்த மூன்று துறைகளுக்கும் இப்போது இந்தப் புது ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஏதோ ஜீவானந்தம் தான் இலக்கியத்தில் பங்கு கொண்டவர், பேசுகிறார்-சரி; இந்த ராமகிருஷ்ணன் என்று ஒருவர் - தலையுமில்லாமல் வாலுமில்லாமல் "தத்தகா புத்தகா" என்று இலக்கியம் பேசுகிறார். ஐயோ! இலக்கியமே! மொழியே! கலையே! உங்களை 'ஆண்டவன்' காப்பாற்றுவாராக!

★

இலக்கியம் என்றதும் சில 'முன்னாள் அமங்கலி'கள் நினைவுக்கு வருகிறார்கள். இவர்கள் இப்போது வட-இந்தி மொழிப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். இவர்களது பேச்சைக் கேட்க முன்பு கூடிய மக்களெல்லாம், இவர்கள் 'கடைந்தெடுத்த வெண்ணெய்'கள் என்பதற்காகக் கூடவில்லை. தமிழுக்குப் பாடுபடுகிறார்கள் என்பதால்தான் கூடினார்கள். இனி இவர்கள் பேசும் மேடைகளுக்கு முன்னால் வேட்டிகளைக் காயப்போட்ட மாதிரி இந்தி எழுத்துக்கள் தொங்கும்! வட மொழி என்றொரு பாடை பிணத்தோடு கிடக்கும்! அந்தப் பிணத்துக்கு முன்னால், இந்தப் பிணங்கள் ஆரத்தி எடுப்பதைக் காணலாம்!

இந்தி என்றதும் சுப்பிரமணியம் நினைவுக்கு வருகிறார். "இந்தி படிக்காவிட்டால் நாம் பின்தங்கி விடுவோம்" என இவர் பயமுறுத்துகிறார். அடிமைச்சாசனம் எழுதிக்கொடுத்துவிட்ட அதிமேதாவி அல்லவா? மலநாற்றம் நாறும் இந்தி மொழியை, இவர் மடியில் கட்டி வைத்துக்கொள்வதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. அதை விருந்து வைக்கக் கையிலும் எடுக்கிறார்; சுவைத்தும் பார்க்கிறார் - பிறருக்கும் தருகிறார். உண்ணாவிட்டால் உடம்பு இளைத்துவிடும் என்றும் கூறுகிறாரே, அதுதான் 'அசிங்க'மாக இருக்கிறது. தமிழ் என்னும் சோற்றை கவனிக்காததாலேயே இந்தி என்னும் மலம் இவருக்கு இனிக்கிறது. தமிழ்ப் புலவர்கள் தாங்களும் அதைச் சுவைப்பதைக் காட்டிலும், சோற்றை எடுத்து சுப்பிரமணியத்தின்முன்னால் நீட்டுவது சிறந்ததல்லவா? உவமை 'அசிங்க'மாக இருக்கிறதா? இந்திக்கு இதைத் தவிர வேறு சிறந்த எதை உவமிப்பது?

இதுமட்டுமா அமைச்சர் சொன்னார்? "திராவிட நாடு பெறுவதை நான் சகிக்கமாட்டேன்!" என்றார். இதற்குத்தான் நமது நாவலர் சொன்னார்; "இவர் என்ன 'இந்தியாக் கண்டத்து நவாப்'பா, சகிக்கமாட்டேன் என்று கூற? வேண்டுமானால் துணை செய்யமாட்டேன் ஆதரிக்கமாட்டேன் என்று கூறு. அர்த்தம் உண்டு. சகிக்கமாட்டேன் என்ன, சகிக்கமாட்டேன்!" - அடுத்த தேர்தலில் தோற்றுப்போனால், சுப்பிரமணியம், c/o பெஞ்சுக் கோர்ட்டு!- இவர் என்ன சகிப்பது!

• பரிதாபத்திற்குரிய சிவஞானம் தான் இதுமாதிரியெல்லாம் பேசுவார். படித்த சுப்பிரமண்யம், கலைவாணர் என். எஸ். கே. எடுக்க இருந்த படத்தின் பெயர் மாதிரி ஆகலாமா? ஒருவேளை தி. மு. கழக எம். எல். ஏ.க்கள் சத்தியவாணி அம்மையார், கோவிந்தசாமி, ஆசைத்தம்பி, எம். பி. சுப்பிரமணியம், அன்பழகன் முதலியோர் சட்டசபையில் கொடுத்ததிலே எழுந்த வேகம் இப்படி அவரைப் பேச வைத்ததோ? இவர் எப்படி வக்கீலாக இருந்தார்? இவரது கட்சிக்காரர்கள் எல்லாம் இப்போது ஜெயிலில்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த ஐந்து ஆண்டுகளில் காங்கிரசுக்கும் அழுத்தமான சமாதி எழுப்பப்படும் என்றால், அதை அமைத்துத் தந்தவர் நமது நிதி அமைச்சராகத்தான் இருப்பார்!

—**வணங்காமுடி**

பன்மொழிப் புலவர்

பொன்விழா

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

பெரியோர்களே! தோழர்களே!

வணக்கம். பன்மொழி பயின்று தேர்ந்த நல்லாசிரியரும், நற்றமிழ் வாழ, வளர - அரும்பணிகள் பல ஆற்றி வருபவரும், சீர்திருத்தச் செம்மலும், பகுத்தறிவு மணம் எங்கணும் பரப்பி வருபவரும், பொது நலத் துறைக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துச் செயலாற்றி வருபவரும், நேரிய கொள்கைகளுக்காகப் பரிந்து பேசவும்-போராடவும்-தடியடி தாங்கவும்-சிறை புகவும் துணிந்த செயல்வீரரும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு உழைத்து வருபவரும் ஆன **பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்** அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

பன்மொழிப் புலவரின் பொன் விழாவைப் பெருமைக்குரிய வகையிலும், பூரிப்புக்கொள்ளும் முறையிலும் சிறப்பாக நடத்தவேண்டும் என்பது நண்பர்கள் பலரின் வேணவாவாகும். அவரது பொன் விழாவைக் கொண்டாடி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல், அவரையும் நிலையாக மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் இருக்கிறோம். பொதுவாகப் புலவர் பெருமக்களைப் பிடிக்கின்ற வறுமை அவரைப் பெருமளவுக்குப் பிடித்து வாட்டி வதைக்கிறது. அந்தக் கொடுமையினின்றும் அவரை விடுவித்து, மகிழ்ச்சிகொள் அமைதியான வாழ்வில் அவரை ஈடுபடுத்த வேண்டியும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் பயக்க வேண்டியும் அவருக்குச் சிறப்புக்குரிய வகையில் பணமுடிப்பைப் பரிசாக வழங்க வேண்டும் என்று நண்பர்கள் பலரும் விரும்பியுள்ளனர்.

பன்மொழிப் புலவர் பொன்விழாக் குழு ஒன்றை உருவாக்கி, அதில் அன்பர்கள் பலரையும் உறுப்பினர்களாக ஆக்கிடும் பொறுப்பினைத் தோழர் கண்ணதாசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

விழாக்குழுவின் பொருளாளராக இருந்து பணியாற்ற **அறிஞர் அண்ணா** அவர்கள் இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நிதி தந்து உதவுவோர், '**சி. என். அண்ணாதுரை, c/o 'நம் நாடு', 24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13**' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், தமிழார்வங்கொண்ட பிற அன்பர்களையும், பன்மொழிப் புலவரின் பொன்விழா முயற்சி வெற்றியுறப் பேருதவி புரியுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர்,
தி. மு. கழகம்.

'அறிவகம்,'
சென்னை - 13.
23-7-57.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.